# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க,
# அச்சீட்டாளர்
# வெளியீட்டாளர் (திருத்தச்) சட்டம்

---

*[1983, ஓகத்து மாதம் 10 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஓகத்து மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 35*

*தபாற் செலவு : சதம் 50*

**1983 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, அச்சிட்டாளர், வெளியிட்டாளர் (திருத்தச்) சட்டம்**

**[1983, ஓகத்து மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]**

ச. வ.—ஓ. 118/78
1169

**அச்சிட்டாளர், வெளியிட்டாளர் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—**

1. இச்சட்டமானது 1983 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, அச்சிட்டாளர், வெளியிட்டாளர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. 1976 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான அச்சிட்டாளர், வெளியிட்டாளர் கட்டளைச்சட்டத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :— 179 ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

" தவறுகள். 8. (1) இக்கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் எந்த ஏற்பாடுகள் அச்சிட்டாளரொருவருக்கு ஏற்புடையனவாக உள்ளனவோ அந்த ஏற்பாடுகளுக்கு, அல்லது 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அவர் இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு (அத்தகைய குற்றப்பணம், நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத் தொகையை விஞ்சுவதாகவிருப்பினும்) ஆளாதலும் வேண்டும்.

(2) இக்கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் எந்த ஏற்பாடுகள் அத்தகைய அச்சிட்டாளரொருவரைத் தொழிலுக்கமர்த்துகின்ற வெளியிட்டாளரொருவருக்கு அல்லது வேறு ஆளுக்கு ஏற்புடையனவாக உள்ளனவோ அந்த ஏற்பாடுகளுக்கு அவர் இணங்கியொழுகத் தவறுமிடத்து, அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப் பணத்திற்கு (அத்தகைய குற்றப்பணம், நீதிமன்றம் அதன் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத் தொகையை விஞ்சுவதாகவிருப்பினும்) ஆளாதலும் வேண்டும்.".

A—70847—3.480 (83/06)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 100 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.